
# வகுத்தல் - 3




## 2ஆல் வகுப்போம்.

உதாரணம்:

648 ÷ 2

```
    3 2 4
2 | 6 4 8
  | 6
  -------
    0 4
    0 4
  -------
      0 8
        8
  -------
        0
  =======
```

648 ÷ 2 = 324



**1** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

(1) 142 ÷ 2 =

(2) 468 ÷ 2 =

(3) 284 ÷ 2 =

(4) 844 ÷ 2 =

வாரம் 34

# வகுத்தல் - 3

### 3 ஆல் வகுப்போம்.

உதாரணம்:

963 ÷ 3

```
     3 2 1
 2 | 9 6 3
   | 9
   -------
     0 6
       6
     -----
       0 3
         3
   -------
         0
```

963 ÷ 3 = 321



**2** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

(1) 159 ÷ 3 =

(2) 999 ÷ 3 =

(3) 366 ÷ 3 =

(4) 669 ÷ 3 =

### 4 ஆல் வகுப்போம்.

உதாரணம்:

487 ÷ 4

```
     1 2 1
 4 | 4 8 7
   | 4
   -------
     0 8
       8
     -----
       0 7
         4
     -----
         3
```

487 ÷ 4 = **121 மீதி 3**



**3** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

(1) 124 ÷ 4 = ............

(2) 447 ÷ = ............

(3) 368 ÷ 4 = ............

(4) 886 ÷ 4 = ............

# வகுத்தல் - 3

வாரம் 34

## 5 ஆல் வகுப்போம்

**உதாரணம்:**

537 ÷ 5

```
    1 0 7
5 | 5 3 7
    5
    -----
    0 3
      0
    -----
    3 7
    3 5
    -----
      2
```



537 ÷ 5 = **107 மீதி 2**

**4** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

(1) 158 ÷ 5 =

(2) 555 ÷ 5 =

(3) 359 ÷ 5 =

(4) 558 ÷ 5 =



**5** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

(1) 247 ÷ 2 =

(2) 635 ÷ 3 =

(3) 845 ÷ 4 =

(4) 598 ÷ 5 =

(5) 689 ÷ 2 =

(6) 849 ÷ 4 =

வாரம் 34

# வகுத்தல் - 3

*சமமாக வகுப்போம்.*

உதாரணம்:

85 நாவல் பழங்கள் நான்கு பிள்ளைகளுக்கிடையே சமமாகப் பங்கிடப்பட்டன. ஒரு பிள்ளைக்கு எத்தனை நாவல் பழங்கள் கிடைக்கும்? எத்தனை பழங்கள் எஞ்சியிருக்கும்?

```
   2 1
  ┌────
4 │85
  │8
  └────
   0 5
     4
  ────
     1
  ════
```

ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் நாவல் பழங்கள் = 21
மீதியாகும் நாவல் பழங்கள் = 1

**6** விடை அளியுங்கள்.

(1) ஒரு வரிசையில் 4 பிள்ளைகள் வீதம் 128 பிள்ளைகள் வரிசைகளில் நின்றனர். அவர்கள் எத்தனை வரிசைகளில் நின்றனர்?

(2) ஒரு பிள்ளைக்கு 5 புத்தகங்கள் வீதம் கிடைக்கக் கூடியதாக 144 புத்தகங்கள் பங்கிடப்பட்டன. அப்புத்தகங்களை எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்? மீதி எத்தனை புத்தகங்கள்?

(3) ஒரு நாற்றுமேடையில் ஒரு வரிசையில் 3 நாற்றுகள் வீதம் நாட்டப்பட்டுள்ளன. மொத்தம் 135 நாற்றுகள் இருப்பின் அவை நடப்பட்டுள்ள வரிசைகள் எத்தனை?

(4) 127 அப்பியாசப் புத்தகங்கள் 4 பிள்ளைகளிடையே சமமாகப் பங்கிடப்பட்டன. ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் புத்தகங்கள் எத்தனை? எத்தனை புத்தகங்கள் மீதியாகும்?

